# வடபகுதியில் சீ-நோர் நிறுவனம் மூடப்படுகிறது

[யாழ்ப்பாணம்]
கடந்த 25 வருடங்களாக நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் வடபகுதியில் இயங்கிவந்த சீ-நோர் ஸ்தாபனம் வெகுவிரைவில் முற்றாக மூடப்படவிருக்கிறது.

வடபகுதியிலிருந்து இந்நிறுவனத்தை முற்றாக மூடுவதற்கான ஆயத்தங்களை அரசு மேற்கொண்டுவருகிறது. தற்போது மேற்படி விடயம் அமைச்சரவையின் தீர்மானத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

09-5-1991


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 26 ஏவிளம்பி 23 இதழ்: 88

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-5-1991


## இலங்கை விவகாரம் இந்தியா தலையிடாது

(புதுடில்லி)
இந்திய தேர்தல் முடிவடைந்து புதிய அரசு பதவியேற்கும் வரை இலங்கை தொடர்பான எந்த விவகாரத்திலும் இந்திய தலையீடு இருக்காதென புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வர்த்தக, கலை, கலாசார

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொடர்ந்து அகோர குண்டுவீச்சு

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 4 நாட்களாக அகோர விமானத் தாக்குதல் இடம்பெற்று வருகிறது.

கொந்தக்காரன் குளம், மாதர்பணிக்கர் குளம் மகிழங்குளம் பாடசாலை, கூட்

(4-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கையில் அமைதி ஏற்படுத்த

# ஆஸ்திரேலிய தரப்பில் முயற்சி

# முக்கிய பிரதிநிதி யாழ். வருகிறார்

(கன்பரா)
**இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் அமைதியை ஏற்படுத்த 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பு' தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக இவ் அமைப்பின் தலைவர் திரு. எல். எஸ். ரெய்ட் 13ம் திகதி திங்கட்கிழமை இலங்கை வருகிறார்.**

இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த ஆஸ்திரேலிய அரசு தொடர்ந்து முயற்சித்து வருவதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைவரும் திரு. ரெய்ட் இங்கு எட்டு நாட்கள் தங்கியிருப்பார். இக்காலப்பகுதியில் பெருமளவு நாட்கள் இவர் யாழ்ப்பாணத்தில் தங்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது திரு. ரெய்ட் 'மனித உரிமை' தொடர்பான பல நடவடிக்கைகளையும் மேற்கொள்வாரெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## புலிகள் கடும் தாக்குதல் இராணுவம் பின்வாங்கியது

(வவுனியா)
வவுனியா பணிக்க நீராவியில் முகாமிட்ட படையினர் மீது நேற்று நண்பகல் புலிகள் மேற்கொண்ட கடும்தாக்குதலால் நிலைகுலைந்த படையினர் பின்வாங்கி இறம்பைக்குளம் சென்றுள்ளனர்.

புலிகள், படையினருக்கு எதிராக மேற்கொண்ட இக்கடும்தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இத்தாக்குதலின்போது படையினருக்கு உதவியாக விமானப்படையும் உதவி புரிந்தது (ஏ)

## விசாரணைக்கு ஏற்பாடு

(கொழும்பு)
பிரான்ஸ் மருத்துவ நிவாரணக் குழுவினர் தாண்டிக்குளத்தில் விமானத்தாக்குதலுக்கு இலக்கானது குறித்து தனிநபர் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சில பகுதிகளில் தேர்தல் நடத்த யோசனை?

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திலுள்ள சில மாவட்டங்களில் விரைவில் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக அரசு ஆலோசித்துவருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள நகர சபைகள், பிரதேச சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவற்றையடுத்தே மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொடர்பாக முடிவுசெய்யப்படுமெனவும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன. (153)

## 9 பேர் பலி

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் ராவல்பிண்டி ஆஸ்பத்திரியில் நேற்று ஏற்பட்ட குண்டுவெடிப்பில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். இருபத்தைந்துபேர் படுகாயமடைந்தனர். (ஏ)

## 10,000 குழந்தைகள் இலங்கை விற்பனை

(கொழும்பு)
இலங்கையிலிருந்து சுமார் 10,000 குழந்தைகள் கடந்த 8 வருடங்களில் மேற்கு நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு குழந்தையும் 5 லட்சம் ரூபா முதல் 7 லட்சம் ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் பெற்றோருக்கு மிகமிகக் குறைந்தளவுபணமே கிடைக்கிறது

(4-ம் பக்கம் பார்க்க)

## 20 கோடி ரூபா அமெரிக்கா உதவி

[வாஷிங்டன்]
1992-ம் ஆண்டுக்காலப் பகுதிக்கான நிதியாக அமெரிக்கா இலங்கைக்கு 20 கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

இதற்கான அனுமதியை அமெரிக்க அரசு காங்கிரஸ் சபையிடம் கோரியுள்ளது. சபையின் அனுமதியும் விரைவில் கிடைக்குமெனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் இடம்பெறும் 'மனித உரிமை மீறல்' குறித்தும் அமெரிக்கா கவலை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தேர்தல் கடமையில் 50,000 பொலிசார்

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெறும் உள்ளூராட்சி தேர்தல் கடமையில் சுமார் 50,000 பொலிசார் ஈடுபடுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த 17 மாவட்டங்களில் பலத்த

(4ம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் குழு தொடர்ந்து இயங்கும்

(யாழ்ப்பாணம்)
பிரான்ஸ் மருத்து நிவாரணக் குழு (எம் எஸ். எவ்.) வடபகுதியில் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 3ந் திகதி வவுனியா சாஸ்டிக்குளம் பகுதி

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதி பொலிஸ் மாஅதிபர் மோதலில் பலி

(சண்டிகார்)
பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகளுடன் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோதலில் பஞ்சாப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. அஜித்சிங் கொல்லப்பட்டார். மற்றும் 3 உயர் அதிகாரிகள் படுகாயமடைந்தனர்.

போர் நடவடிக்கையை கண்காணித்துக் கொண்டிருந்தபோது இவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதில் கொல்லப்பட்டார். பொலிஸாருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நேற்று இரவும் தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

## ஆயிரக்கணக்கானோர் கொலை 6,000 தமிழரை காணவில்லை

(புதுடில்லி)
வடக்கு-இழக்கு பகுதியில் கடந்த ஒருவருடத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் 6,000 தமிழர் காணாமல்போய்விட்டதாக இந்தியாவின் பிரபல சஞ்சிகையான 'டெக்ஹான் ஹெரோல்ட்' தெரிவித்துள்ளது.

நடுநிலையான கிறிஸ்தவ அமைப்பொன்றை ஆதாரம்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தாதி பயிலுனர்

தாதிபயிலுனர் தேவை உடன் விண்ணப்பிக்கவும். டாக்டர் P சொர்ணலிங்கம் மூனாய் வீதி, வட்டுக் கோட்டை, (சி 4711)

### சோபிதா புத்தகசாலை

உங்கள் குழந்தைகளின் பாடநூல்களையும், அப்பியாசக் கொப்பிகளையும், பாடசாலை உபகரணங்களையும், கதை, கட்டுரை, கவிதை நூல்களையும் விருப்பம்போல் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்: சோபிதா புத்தகசாலை, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்: (சி 4669)

### வைத்தியம்

வேலணை வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே பி யாழ்ப்பாணத்தில் 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் வைத்தியசாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார் செங்கமாரி. சிறுபிள்ளைநோய்களில் திறமை பெற்றவர். சகல நோய்களுக்கும் சிகிச்சை பெறலாம். (சி–4715)

### தவறிவிட்டது

கபிரியல் இராசமணி ஆகிய எனது 327285319V இலக்க தேசிய அடையாள அட்டையும், 4 கூப்பன்களும், சுண்டுக்குழி ஈச்சமோட்டை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். 1/34, பழைய பூங்கா வீதி. சுண்டுக்குழி. [சி–4717]

### நவீன தையற்கலை

ஆண்களின் உடைகள் தைப்பதற்கு நவீன கட்டிங் படங்களும் விளக்கங்களும் வெளிவந்துள்ளது. பாலாஜி வெளியீடு. விலை ரூபா 39/- பாலாஜி புத்தகசாலை, 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி–4716)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தொழில் நுட்பவலர் தரம் 11 'எ' தற்காலிகம் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 17-06-91ம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்:

சம்பளம் ரூபா 2375/- [நிலையானது] மாதமொன்றுக்கு:

இவைதவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிகளும் செலுத்தப்படும்.

வயது எல்லை:- 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களும் விவரங்களும் இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் [தாபனங்கள்] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படல்வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23x10 ச. மீற்றர் அளவுடையதபால் உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களும் கவனத்திற் கொள்ளப்படும் [ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயது எல்லை பொருத்தமாகாது].

\- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்:
1991-05-06

(எ 1284)

## இன்று யாழ். நூலக ஆலோசனைக் குழுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை நூலக புதிய அங்கத்தினர்களுக்கான முதலாவது கூட்டம் இன்று 9ம் திகதி வியாழக்கிழமை பி. ப 2 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறும்.

முக்கியமாக இந்த ஆலோசனைக்கூட்டத்தில் நூலக வாரம் ஒன்றை நடாத்துவது பற்றி ஆலோசிக்க இருப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்துக்கான புதிய அங்கத்தினர்களாக தொழிலதிபர் திரு. க. கனகராசா பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி), திரு க. சி. குலரத்தினம், திரு எஸ் சிவபாதசுந்தரம், பாதிரியார் பரியோவான் தேவாலயம் திரு. எஸ். செல்வராசா, திரு. நா. மயில்வாகனம், பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், வணபிதா பிரான்சிஸ் ஜோசப் திரு. ஜே சி கனகரட்ணம், பேராசிரியர். கே குணரத்தினம் திரு க சொக்கலிங்கம் [சொக்கன்] ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [152]

## சங்கீத நடன ஆசிரியர் சேவைக்கால பயிற்சி நாளை ஆரம்பம்

[மானிப்பாய்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சங்கீதம், நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நாளை 10ந் திகதி காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

சகல சங்கீத நடன ஆசிரியர்களையும் தமது கோட்டங்களுக்குரிய பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் மருதனமடம் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குநாளை 10ந்திகதிராமநாதன் கல்லூரியிலும் சாவகச்சேரி கோட்டம், 11ந் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், வேலணை கோட்டம் 13ந் திகதி யாழ்ப்பாணம்

(3-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியருக்கு ரூபா 300 மேலதிகப்படி இம்மாதம் கிடைக்கும்

(கொழும்பு)

கூட்டுறவுத்துறை ஊழியர்க்கு 300 ரூபா மேலதிகப் படி இம்மாதம் கிடைக்கவுள்ளது.

மேலதிகப்படி வழங்குவதற்கான சுற்றுநிருபம் நாட்டிலுள்ள சகல கூட்டுறவு அலுவலகங்களுக்கும் நேற்று கூட்டுறவு ஆணையாளரால் அனுப்பப்பட்டன

சகல நிரந்தர, தற்காலிக, சமயாசமய ஊழியர்கட்கும் இது கிடைக்கும்.

## தீவுப்பகுதி அஞ்சலகங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

(வேலணை)

தீவகத்தில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு யாழ். பிரதம அஞ்சலகத்தில் தீவகத்தில் இயங்கிவந்த அஞ்சலகங்களான மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, அஞ்சலகங்கள் இயங்கிவருகின்றன.

தற்காலிகமாக இயங்கிவருகின்ற இந்த அஞ்சலகங்களில் மக்கள் தங்களுக்குரிய கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் காலை 9மணி முதல் நண்பகல் 12 மணிவரையுமே இந்த அஞ்சலகங்கள் இயங்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. [75]

## வெளிநோயாளர் மண்டபம்

(பளை)

பளை செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பளை அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் வைத்தியசாலைக்கு செல்லும் வீதியை தார் ஊற்றி திருத்தம் செய்து கொடுத்துள்ளனர்.

### குடும்பஸ்தர் தற்கொலை

[பளை]

குடும்பத்தின் கஷ்டத்தை காணச் சகிக்காத குடும்பஸ்தர் மரமொன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் இத்தாவில் சதாபுரத்தில் இடம்பெற்றது முருகர்மார்க்கண்டு (வயது52) என்னும் ஏழு பிள்ளைகளின் தந்தையே தற்கொலை செய்து கொண்டவராவார்.

### உணவுப் பொருள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்து யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு குருநகர் புதிய வர்த்தக சங்கத்தினர் உணவுப் பொருட்களை மும்முறை வழங்கினார்கள்.

### இராசி பலன்

09-05-1991
வியாழக்கிழமை

தசமி பி. ப. 4-38 வரை சதயம் காலை 8–05 வரை மரணயோகம் இராகு காலம் பகல் 1-24 முதல் 2-44 வரை, சுபநேரம் 7-24 முதல் 8–54 வரை.

மேடம்: விருந்தோம்பல், வாக்குவசீகரம், பாராட்டு.

இடபம்: தொழில் முயற்சி, பணவரவு, இனசன உதவி.

(3-ம் பக்கம் பார்க்க)

## மேஜர் டயஸ், மேஜர் அன்ரனி வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு ''மேஜர் டயஸ்'' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட மென் பந்துக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

'மேஜர் அன்ரனி' வெற்றிக் கேடயத்துக்காகத் தற்போது நடாத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை விசேட போட்டிகளாக, ஆண்கள் 5 மைல் மரதன் ஓட்டம். 6 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டம், வலது குறைந்தோருக்கான முச்சக்கர வண்டியோட்டமும் நடைபெறவுள்ளது.

விழாவின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியும், விநோத உடைப்போட்டி உட்பட வேறு சில போட்டிகளும் நடைபெறவுள்ளன. [வி]

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
15-04-1967

உதிர்வு :
09-05-1985

### ந. அம்பிகாபதி நந்தகுமாரன்

வருடங்கள் ஆறு கழிந்தாலும்
அருமை மகனே
உமது நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டு
அகலவில்லை

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

ஐயா, அம்மா.

மார்க்கட் லேன்,
உடுப்பிட்டி.

(சி 4698)

## பங்களாதேஷில் நாற்பது லட்சம் மக்கள் பட்டினியால் பாதிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் சூறாவளியில் பாதிக்கப்பட்டுள்ள 40 லட்சம் பேர் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர்

17 மாவட்டங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

காலநிலை இன்னும் சரியில்லாததினால் உணவு விநியோகம் தடைப்பட்டுள்ளது:

ஹெலிக்காப்டர் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகள் போடப்படுகின்றன இருந்தும் சீரற்ற உணவு விநியோகத்தால் மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஷியா ஐ.நா.வையும் ஏனைய நாடுகளையும் உதவி கோரி விண்ணப்பித்துள்ளார்.

## நாளை அதிபர்கள் சங்க கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அதிபர்சங்க கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறும். இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அதிபர்கள்சேவை, இலங்கை கல்வி நிர்வாகசேவையைச் சேர்ந்த சகல அதிபர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ★ "தி. மு. க. ஆட்சியைக் கலைத்தவர்கள் தமிழ்மக்களுக்கு விடுத்துள்ள சவாலை எதிர்கொள்வோம்"

## — கலைஞர் கருணாநிதி

(தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தேர்தலை யொட்டி கழக ஏடுமூலம் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

பதவி வரும்-போகும் நம்வரலாற்றில் அவ்வாறு வந்ததும் உண்டு போனதும் உண்டு. ஆனால் நிலையானது நமது இலட்சியம்தான்.

கடந்த தேர்தலில் இரண்டு மூன்றுகட்சிகள் பெற்ற வாக்குகளைக் கூட்டிப்பார்த்து அந்தக் கணக்கின்படியும் - வேண்டுமென்றே திட்டமிட்டு சில ஏடு சிலரைத் தூக்கி நிறுத்தி பூதாகாரமாக சித்தரிக்கும் பிரசார யுத்தியின்படியும் தி. மு கழகம் இந்த தேர்தலில் தோற்றுவிடும் துவண்டுவிடும் எனக் கர்வம் கொண்டு பேசுகிறவர்கள் கூற்றுக்கு சற்றும் அஞ்சாமல் ஒவ்வொரு தொகுதியிலும் பல உடன்பிறப்புகள் செயலாற்றி வருவதைக் கண்டு இதயம் பூரித்து போகிறது.

1977-ல் 30 சதவீத வாக்குகளை மட்டும் பெற்று அ. தி. மு. க. ஆட்சி அமைத்ததையே மறந்துவிட்டு 1989-ல் 34 சதவீத வாக்குகளைப்பெற்று 145 கழக சட்டமன்ற உறுப்பினர்களுடன் அமைந்த கழக ஆட்சியை கலைத்த சதிகாரர்கள் தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள அறைகூவலை எதிர்கொள்வோம். இதற்காக வீறுநடை போட்டுவரும் உடன் பிறப்புக்களின் நிமிர்ந்த நெஞ்சைக் காண்கிறேன்.

1977-ல் 30 சதவீதம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்குவந்த அ. தி. மு. க. கட்சி 1980-ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் புதுவை உட்பட 40 நாடாளுமன்ற தேர்தலில் 38 இடங்களில் தோற்று இரண்டே இடங்களை மட்டுமே பெற்றது. அடுத்த சில மாதங்களில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அதே கூட்டணிதான் மோதின. ஆனால் அ. தி. மு. க. ஆட்சி அமைத்தது.

1984-ல் பெரும் அனுதாப அலை வீசியபோது தமிழகத்தில் மீண்டும் அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தது.

ஆனால் 1986-ல் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கம், பின்னர் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பெரும் தோல்வியை சந்தித்தது.

"இத்தேர்தலில் பெறப் போகும் வெற்றி பெறும் பதவிக்கான வெற்றி யல்ல. பகுத்தறிவு அடிப்படையில் முழங்கி வரும் முற்போக்கு கருத்துக்களின் வெற்றி யாகும்."

ஏறத்தாழ கேரளத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணிக்கு இதேநிலைதான்.

### தமிழ்நாடு தேர்தல் களம்

அ. தி. மு. க. வெற்றிவாகை சூடவில்லை; மாறாக தி. மு. க-வும் தோழமைக் கட்சிகளும் தான் பெரும்பான்மை இடங்களில் வென்றன.

1989-ல் சட்டமன்ற தேர்தலில் ஆட்சியை அமைத்த கழ 1989 நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்டது.

எனினும் இப்போது கேரளத்தில் நடந்து முடிந்த மாவட்ட கவுன்சில் தேர்தலில் மார்க்சிஸ் அணி மிகப்பெரும் வெற்றிபெற்று காங்கிரஸிற்கு படுதோல்வியை வழங்கியிருக்கிறது.

இப்படி அவ்வப்போது எழும்சூழல் அரசியல் நிலவரத்திற்கு ஏற்பட வாக்காளரின் தீர்ப்பு அமைகிறது என்பதை உணர்ந்துள்ள காரணத்தாலும் எந்த நிலையிலும் உறுதி தவறாதவர்கள் என்ற காரணத்தினாலும் வெற்றி முரசுகொட்டிட நமது வீரமிகு அணிவகுப்பு தினந்தோறும் திரள்கிறது அண்ணா அறிவாலயத்தில்.

அதனால் தான் சொல்கிறேன். நாம் இந்தத் தேர்தலில் பெறப்போகிற வெற்றி வெறும் பதவிக்கான வெற்றியல்ல. பகுத்தறிவு அடிப்படையில் முழங்கிவரும் நமது முற்போக்கு கருத்துகளுக்கும் திட்டங்களுக்கும் செயலாக்கம் தருவதற்கான வெற்றியாகும்.

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை நடுத்தரமக்களுக்கான சமநிதி வழங்கி நேர்மையான நிர்வாகம் நடத்திட வகைசெய்யும் வெற்றியாகும்.

தொகுப்பு:
இ. சிவச்செல்வன்

### இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிதுனம்: குடும்பத்தகராறு, அலைச்சல். நிம்மதிக் குறைவு.

கடகம்: அறிபர் நேசம், தொழில் விரோதம். பண முடக்கம்.

சிம்மம்: குடும்ப சுகம், பணச்செலவு, பணியாளர் லாபம்.

கன்னி: மனப்போராட்டம், தொழில் கஷ்டம், கடித நொல்லை.

துலாம்: உடல் உபாதை, குடும்பப் பிரச்னை, அகால போஜனம்.

விருச்சிகம்: அந்நிய வாசம் வாக்குக்கலகம், படபடப்பு.

தனுசு: தவறான பாதை, மனவிரோதம், குடும்பச் செலவு.

மகரம்: கடமையுணர்வு, அதிகாரிகள் சினம், ஆலய தரிசனம்.

கும்பம்: விவேகமான முடிவு புத்திரர் மகிழ்ச்சி, இடமாற்றம்.

மீனம்: வாக்குவன்மை, அதிகாரச்சிறப்பு, புதியபதவி.

- ஜோஸ்யர்

# புங்குடுதீவுப் பகுதியில் வீடுடைத்துக் கொள்ளை

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்ட இராணுவநடவடிக்கை காரணமாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். நகருக்கு வந்துள்ள மக்களின் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டு வருகிறது.

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள வீடொன்று உடைக்கப்பட்டு, அங்கிருந்து உடுபுடவைகள், தையல் உபகரணங்களும் எடுத்து வைத்திருந்த நிவாரணப் பொருட்களும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பதினொராம் வட்டாரத்திலுள்ள ரேமான்ஸ் ஸ்ரோர்ஸ் சந்திக்கருகிலுள்ள க. கணேசலிங்கம் என்பவரது வீடே இவ்வாறாகக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. (101)

# அன்னை திரேசா சென்ற ஹெலி அவசரமாகத் தரை இறக்கப்பட்டது

(டாக்கா)

அன்னை திரேசா, பாகிஸ்தான் பிரதமர் நவாப் சரீப், பங்களாதேஷ் பிரதமர் திருமதி பேகம்கலிதாசியா ஆகியோர் ஒன்றாகப் பிரயாணம் செய்த ஹெலிக்கொப்டர் அவசர அவசரமாகக் கிராமமொன்றில் தரையிறக்கப்பட்டது.

சூறாவளியால் அழிந்து போன பங்களாதேஷின் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஹெலிக்கொப்டரில் மேற்படி மூவரும் சென்றபோது, திடீரென காலநிலை மாற்றம் அடைந்து கருமுகில்கள் வானத்தை மூடிக்கொண்டதால், பயணத்தைத் தொடர்வது மிகக்கடினமென விமானி அறிவித்ததைத் தொடர்ந்து ஹெலி அவசர அவசரமாகத் தரையிறங்கியதாம்.

டாக்காவிலிருந்து 18 மைல்களுக்கு அப்பாலுள்ள சனநடமாட்டமில்லாத ஒரு கிராமத்திலேயே மேற்படி ஹெலி இறங்கியதாம். (வி)

### ஓய்வு பெற்றார்

(ஊர்காவற்றுறை)

யாழ். சுங்கத் திணைக்களத்தில் சுங்கக் காவலராகச் சேவையாற்றிய திரு. சவிரிமுத்து ஜேம்ஸ் ஓய்வுபெற்றுள்ளார். (59)

# தமிழீழ ஆய்வு நிறுவன 'மே'தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் மேதினம் தொடர்பாக நடத்திய போட்டிகளில் இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

துலாமிதித்தல்:- 1.வி. தனபாலசிங்கம், (கந்தரோடை) து. செல்வராசா, வே 2. சிவலிங்கம், இ நகுலேஸ்வரன், 3. நா. மகேசன் (வட்டுக்கோட்டை) ஆ. கிருஷ்ணபிள்ளை

துலாமிதித்தல்: (பெண்கள்) க. தருமா, கரும்பைக்குறிச்சி, செல்வி புஷ்பலதா, வரணி, 2. கு. சுமதி, இடைக்குறிச்சி, கு. வசந்தா, வரணி 3 சி. சசிகலா, அல்லாரை மேற்கு. மா மணிமேகலை, கொடிகாமம்

தடிவிளக்குமாறு செய்தல்:- 1. ச. வித்தியரூபன், கொடிகாமம். 2. வி. சண்முகராசா, கொடிகாமம்.

தும்புத்தடி செய்தல்;- 1. கி. தவராசா, இடைக்குறிச்சி, 2. செ. மனோசங்கர், கொழும்புத்துறை, 3. து. மோகனராசா. கொழும்புத்துறை.

கொத்துதல்;- [ஆண்கள்] 1. நா. ஆழ்வாப்பிள்ளை, முரளி வீதி, ஆவரங்கால். 2. கு. சத்தியலிங்கம், கரணவாய் கிழக்கு, 3. ஆ. இராசரத்தினம், கேடில்ஸ் நகர், மிருசுவில்.

பாதணி செய்தல்:- து. உதயசூரியன், அல்வாய் தெற்கு. அல்வாய்.

உள்ளூர் உணவு தயாரித்தல்; 1. ச. கௌசலாதேவி கி. உ. கு. ஆவரங்கால், 2. ரஞ்சி பரக்கியதா சி. உ. கு. பண்டத்தரிப்பு, 3. அ. கமலேஸ்வரி, ஆவரங்கால், புத்தூர்.

தோட்டம் கொத்துதல்:- (பெண்கள்] 3. க. இராஜேஸ்வரி, கேடில்ஸ் நகர், மிருசுவில், 2. கு. சுமதி, இடைக்குறிச்சி, வரணி, 3. கு. வசந்தா, இடைக்குறிச்சி. வரணி.

பனை ஏறுதல்:- 1. தி. அருமைத்துரை, 2. சு. சிறி, 3. ந. ரதீஸ்வரன்.

கிடுகு பின்னுதல்:- 1. இடம் ந, மணிமேகலை, 2. வ. கணபதிப்பிள்ளை. 3. லோ. நிலாபுவனேஸ்வரி.

குப்டான் இழைத்தல்:- 1. ச. கலாதேவி, 2. க. தர்மஜெகதீஸ்வரி, 3. து. ஜெயந்தினி.

இப்போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் 12-ம் திகதி இரவு 7 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகக் கலையரங்கில் நடைபெறும். அன்றைய தினம் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் தமது பரிசினைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பதனீர் போட்டியில் பரிசில்பெற்றவர்களும் கௌரவிக்கப்படுவர்.

# தீவுப்பகுதி அகதிகள் பெயர்களை பதிய வேண்டும்

(மானிப்பாய்)

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் அகதியாகத் தங்கியிருப்பவர்கள் தாம் எந்தெந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருக்கின்றார்கள் என்ற விபரங்களைத் தமது பகுதிக்கிராம சேவையாளரிடம் பதிவு செய்யுமாறு தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

மேலும் இவர்கள் 37-வது கட்ட உலர் உணவு நிவாரணப் பொருட்களை புங்குடுதீவு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களாயின் யாழ். சிறும்பியடியிலுள்ள மணியம் கட்டிடத்தில் தற்காலிகமாக் இயங்கும் ப. நோ. கூ. சங்கத்திலும், வேலணைப் பிரிவை சேர்ந்தவர்கள் பிள்ளையார் விலாஸ் கட்டிடத்தில் இயங்கும் வேலணை ப. நோ. கூ. சங்கத்திலும் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிவாரணத்தைப் பெறுவதற்கு உலர் உணவு அட்டை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், ஏனையவர்கள் தங்கள் பெயர்களைக் கூறிப் பதிவு செய்யலாமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (71)

# வெளிமாவட்ட ஆசிரியர் வரவு பதிவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களிலிருந்து முதலாம் தவணை விடுமுறைக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் ஆசிரியர்கள் போக்குவரத்துச் சிரமம் காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்கும் காலத்தில் தங்கியுள்ள இடத்துக்கு அண்மையிலுள்ள கோட்டங்களில் தங்கள் வரவைப் பதிவு செய்துகொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தாம் கடமையாற்றும் மாவட்டங்களுக்கு மீண்டும் செல்லும்போது இந்த ஆசிரியர்களுக்கு வரவு பதிந்த அத்தாட்சிக் கடிதங்கள் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்படும். (152)

# இராணுவ நடவடிக்கையால் காரைநகரில் 700 ஏக்கரில் சிறுதானிய உற்பத்தி பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

காரைநகர்ப் பகுதியில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கை அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக அழிந்துபோகும் நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சிறுதானியச் செய்கை உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் காரைநகர்ப் பகுதியில் சுமார் 700 ஏக்கர் காணியில் எள்ளு, பயறு, கௌபீ, சணல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போது நல்ல விளைச்சல் கண்டு அறுவடைக்குத் தயாரான நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கையை அடுத்துப் பெருந்தொகையானவர்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வேறிடங்களுக்கு சென்றுவிட்டதால் இந்தப் பயிர்களை உரிய காலத்தில் அறுவடை செய்யமுடியாத நிலைஏற்பட்டுள்ளதாகவும் இது பற்றித் தெரிவிக்கப்படுகின்றது. (72)

பங்களாதேஷில்

# கடலில் வீசிய சூறுவளியில் 7000 மீனவர்கள் பலி!

(டாக்கா)

பங்களாதேஷில் அண்மையில் வீசிய சூறுவளியின் போது, கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூவாயிரம் படகுகளைக் காணவில்லை என்றும், அதில் இருந்த ஏழாயிரம் பேர் இறந்திருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சூறாவளி வீசும் போது, கடற்கரையில் கட்டப்பட்டிருந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன என்றும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட படகுகளைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்களினால் பங்களாதேஷின் கடற்றொழில் பெரிதும் பாதிப்படைந்து விட்டதாகவும், இப்பாதிப்பை ஈடுசெய்யப் பத்து வருடங்கள் செல்லுமெனவும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வி)

# மணலாறு மாவட்டத்தில் விமான தாக்குதல்

(வவுனியா)

மணல் ஆறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானத் தாக்குதலையடுத்து அம்மாவட்டத்திலிருந்து பல தமிழர் இடம்பெயர்ந்துள்ளனர்.

நாயாறு, செம்மலையில் அவ்ரோ, 2 பொம்மர்கள், 2 ஹெலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன. பல குடிமனைகள் பலத்த சேதமடைந்துள்ளன. [க]

## வீர மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாந்துறை சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில், வீரவேங்கை கபில் வீரமரணமடைந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மேற்படி முகாம் படையினர் குடும்பஸ்தர் ஒருவரையும் இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (க)

வடக்கு — கிழக்கில்

# 'பார்த்ததும் தாக்கும் முறை' இராணுவ அதிகாரி கூறுகிறார்

(பாங்கொக்)

வடக்கு-கிழக்கில் விமானப் படையினர் 'பார்த்ததும் தாக்கும்' முறையிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் 'ஏசியா வீக்'கிடம் தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரி மேலும்தெரிவிக்கையில்; அமெரிக்காவிடம் உள்ளதுபோல் வசதிமிகுந்த நவீன விமானங்கள் எம்மிடம் இல்லாததால் துல்லியமான தாக்குதலை நடாத்தமுடியாதுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை இலங்கைப் படைகள் தமிழ்ப்பகுதிகளில் தமது தயாரிப்பான தீப்பற்றி எரியும் எண்ணெய் கொண்ட ஜெலிக்னைற்றுடன் சேர்ந்த குண்டுகள், தீப்பற்றி எரியும் வாயுக்குண்டுகள், மனித தோல்களில் ஒட்டிப்பிடித்து எரியக்கூடிய 'றப்பர்' களைக் கொண்ட குண்டுகள் (நேபாம் போல்) பாவிப்பதாக 'ஏசியா வீக்' குறிப்பிட்டுள்ளது. [இ]

## 'சினைப்பர்' தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சின்னமடுவில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காப் படையினர் மீது, புலிகள் நேற்று முன்தினம் 'சினைப்பர்' தாக்குதலை மேற்கொண்டனர். சேத விபரம் பற்றி எதுவும் தெரியவில்லை.

இதேவேளை, சரவணையில் இராணுவத்தினர் மூன்று வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இன்று

(மானிப்பாய்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இப்போட்டி யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 1-30 மணியளவில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும். (71)

## தீவுப்பகுதி பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட அலுவலகத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகள் அனைத்தும் அடுத்த திங்கட்கிழமை 13-ம் திகதி தொடங்கும்.

மண்டைதீவுக் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகள் புனித மரியாள் றோ. க. வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஆயிரக்கணக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டியே இத்தகவலை மேற்படி சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்தபின் அரசு பாரியளவில் படைக்கு ஆட்களைத் திரட்டிவருவதாகவும் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. [சி]

# 5 மாணவர்கள் தீக்குளித்து பலி

(சியோல்)

தென்கொரிய பிரதமர் பதவி விலகவேண்டும் எனக்கோரி மாணவர்கள் நடாத்திவரும் போராட்டத்தில் கடந்த 5 நாட்களில் 5 மாணவர்கள் 'தீக்குளித்து' இறந்துள்ளனர்.

பிரதமர் ரோ-ரி-வு பதவி விலகவேண்டுமென லட்சக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் கடந்த ஒரு வாரமாக ஆர்ப்பாட்டம் நடாத்தி வருகிறார்கள்.

இதனை கட்டுப்படுத்த இராணுவம் முழுத் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பல பகுதிகளிலும் வீதித் தடை ஏற்படுத்தப்பட்டு சோதனைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுறவுச் சங்கம், கோழியர் குளம் பகுதியில் 20 வீடுகள். ஓமந்தை பாடசாலை, நொச்சிமோட்டை, ஓமந்தை, கோழியர் குளம், பன்றிக்காதர் குளம், நம்பைக் குளம், பரநாட்டான்கல், பனிக்கநீராவி, நாவற்குளம், விளாத்திக் குளம், பத்து வீட்டுத் திட்டம், மாணிக்கவளவு, ஆகிய பகுதிகளில் காலை முதல் பிற்பகல் வரை தொடர்ச்சியான விமானத்தாக்குதலும், மாமடு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து இரவு நேரங்களில் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலும் மேற்கொளப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினரின் மூர்க்கத்தனமான இந்நடவடிக்கையினால் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளதோடு பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கிறது.

இதேவேளையில் ஓமந்தை, விளாத்திக்குளம் பகுதியில் பெருமளவு வீடுகளை இராணுவத்தினர் தீவைத்தும் கொளுத்தியும் உள்ளனர். (க)

## பிறப்பு, இறப்பு, விவாக பத்திரங்கள் அவசர தேவைக்கு முன்னுரிமை வழங்கப்படும்

(மானிப்பாய்)

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு விவாக பத்திரங்கள் அவசர தேவைக்கு பெறுபவர்களுக்கு காலை 9 30 மணி தொடக்கம் நண்பகல் 11மணி வரையுமே முன்னுரிமை வழங்கப்படுமெனயாழ் மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இவர் தெரிவிக்கையில் யாழ் நகர் மேற்கு (யாழ் அரசினர் வைத்தியசாலையில்) பிரிவில் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திர இலக்கமும் திகதியும் தெரிந்தால் மட்டுமே இனிமேல் இப்பிரிவிற்குரிய பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்கள் கரும பீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சங்கீத நடன

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து மகளிர் கல்லூரியிலும் பண்டத்தரிப்பு கோட்டம் 20ந் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி கோட்டம் 24ந் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் நடைபெறும். (71)

## வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக 250 தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சீ-நோர் ஸ்தாபனத்தால் குருநகரில் வலை உற்பத்தித் தொழிற்சாலையும் மற்றும் ஐஸ் உற்பத்தி நிலையமும் காரைநகரில் கண்ணாடி நூலிழை வள்ளங்களும் உற்பத்தி செய்யப்பட்டுவந்தது.

கடந்த ஏழு மாதங்களாக மேற்படி ஸ்தாபன ஊழியர்களுக்கு சம்பளங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## விசாரணைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் குறித்தும் இலங்கை பிரான்ஸிடம் கவலை தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவத்தை தவிர்ப்பது தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு தனிநபர் குழுவிடம்' அரசு கோரியுள்ளது. (சி)

## 10,000 குழந்தைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைத் தரகர்களும், சட்டத்தரணிகளும் இவ்விற்பனையில் பெருமளவு பணம் பெறுவதாகவும் அப்புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது. கடந்த 8 வருடத்தில் விற்பனை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்ட தொகையிலும் அதிகமாயிருக்கலாமென்றும் அப்புள்ளி விபரம் கூறுகிறது. [சி]

## பிரான்ஸ்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யில், பொம்மர், ஹெலித் தாக்குதலின்போது வாகனத்தில் வந்து கொண்டிருந்த நான்கு எம்.எஸ்.எவ். மருத்துவ உறுப்பினர்களும் படுகாயமடைந்தனர்.

தற்போது இந்த நான்கு உறுப்பினர்களும் சிகிச்சைக்காகப் பிரான்ஸ் சென்றுள்ளதாகவும், விரைவில் புதிய மருத்துவ உறுப்பினர்கள் மடுகோயில் அகதிகள் முகாமுக்கு வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (153)

## கிராமசேவையாளர் நியமனம் மக்கள் ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

ஈச்சமோட்டைப் பகுதிக்கு புதிய கிராமசேவையாளர் ஒருவரை நியமித்ததற்கு அப்பகுதி மக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராம சேவையாளர் நியமனத்தை ஆட்சேபித்து இப்பகுதி பொதுமக்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று முன்னாள் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டை சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனராம்.

இதுசம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தூதுக்குழுவுக்கு வாக்குறுதி அளித்திருந்தாராம்.

அரச அதிபர் தற்போது இல்லாத சமயம் மேற்படி கிராமசேவையாளரையே இப்பகுதிக்கு மீண்டும் நியமித்திருப்பதாகவும் இதை ஆட்சேபித்து மகஜர் ஒன்றை யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதனிடம் சமர்ப்பித்துள்ளதாக இதில் சம்பந்தப்பட்ட குழுவினர் தெரிவித்தனர். (வி)

# காரைநகர் மாணவர்க்கு புதிய பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்க 4 பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

10-ம் திகதி முதல் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் காலை 8-30 முதல் 10-00 மணி வரையும், யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் நண்பகல் 12-00 மணிமுதல் 2-00 மணி வரையும் மாணவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்படி பாடசாலை ஒன்றில் பொறுப்பாகவிருக்கும் காரைநகர் கொத்தணியை சேர்ந்த மாணவர்கள் அதிபரிடம்பெயர்களைப் பதிவுசெய்யலாம். (சி)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரசியல் விவகாரங்களிலேயே இவ்வாறான தலையீடு இருக்காதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்திய தேர்தலை இலங்கை அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (இ)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செம்பிறை தினத்தையொட்டி நேற்றுக்காலை யாழ். செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களும் தொண்டர்களும் ஆஸ்பத்திரிகளிலுள்ள இரத்த வங்கிகளுக்கு இரத்த தானம் செய்தார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கு 50பேர் இரத்ததானம் வழங்கினார்கள். பருத்தித்துறை ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் 13பேர் இரத்ததானம் செய்தார்கள். (56-153)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கூட்டுத்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 665ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regestered as a News Paper at the General Post office Lankaunder licence number B/100306/81.